கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.92/2004** தேதி**: 08 .10.2025**

வாதி தரப்பு சாட்சி -2 (முத்துகிருஷ்ணன், த/பெ.கணேசன்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**16 –** ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

(1) நான் 8 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் மகாராஜா அசைவ உணவாகம் நடத்தி வருகிறேன். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களது குடும்பத்தின் தரும சொத்தை மீட்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

(2) இந்த சொத்துக்கள் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எத்தனை ஆயிட்ட சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 17 ஏக்கர் சொத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். ஆதியில் இந்த சொத்து யாருக்கு பாத்தியம் என்றால் யாருக்கும் பாத்தியம் இல்லை . இது தரும சொத்து.

(3) என்ன தருமத்திற்காக அந்த சொத்து ஒதுக்கப்ப்ட்டது என்றால் அண்ணதானம், கோயில்களில் தீபாராதனை செய்தல் முதலான பல தரும காரியங்களுக்கா ஒதுக்கப்பட்டது. அந்த சொத்தை தருமத்திற்காக யார் ஒதுக்கியது என்றால் எனது கொள்ளுத்தாத்தா கிருஷ்ணசாமி முதலியார் ஒதுக்கினார்.

(4) என்ன பத்திரத்தின் மூலமாக ஒதுக்கினார் என்றால் பாகப்பிரிவினை மூலமாக ஒதுக்கினார். வா.த.சா.ஆ. 1 தான் அந்த பத்திரம் என்றால் சரிதான். அதன்



PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.10.08 16:44:18 +0530

அசல் எங்கே என்றால் எனக்கு தெரியாது. பாகப்பத்திரம் 1908 ல் எழுதப்பட்டது. உயில் 1920 ல் எழுதப்பட்டது. வா.த.சா.ஆ.2 தான் அந்த உயில் என்றால் சரிதான். அதன் அசல் எங்கே என்றால் எனக்கு தெரியாது. தருமக்கர்த்தா என்னிடம் கொடுக்க வில்லை.

(5) யார் சொத்துக்களை விற்றது என்றால் ஜெனார்த்தன முதலியார் தான் விற்றார். ஜெனார்த்தன முதலியார் அவர் தருமக்கர்த்தாவாக இருந்த போது விற்றார். அவர் என் குடும்ப உறுப்பினர் தான். அவர் எனது ஒப்புதலோடு தான் தருமக்கர்த்தாவாக இருந்தார் என்றால் இல்லை. அவர் எனது ஒப்புதலோடு தருமக்கர்த்தாவாக இல்லை என்று அவரை பதவி விலக கடிதம் எழுதினேனா என்றால் இல்லை.

(6) வா.த.சா.ஆ.3 ன் மூலமாகத்தான் பத்மப்பிரியா ஜெனார்த்தனனை தருமக்கர்த்தாவாக அமர்த்தினார் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.3 ஆனது 11.03.2002 ல் ஏற்படுத்தப்ப்ட்டது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.3 ஏற்படுத்தப்பட்ட பிறகு அந்த ஒப்படைப்பு ஆவணம் தவறானது என்றும் அதற்கு முன்பாக அனைவரிடமும் கலந்துரையாடி இருக்க வேண்டும் என்றும் ஏதேனும் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை.

(7) அறிவிப்பு கொடுக்காததால் அது நாங்கள் அனைவரும் அந்த ஒப்படைப்பை ஒப்புக் கொண்டாதாக அமையும் என்றால் சரியல்ல. எனக்கு என்ன நடந்தது என்று தெரியாது. நான் வழக்கு சொத்தை எந்த காலத்திலும் பார்த்தது இல்லை என்றால் சரியல்ல. பரிபாலம் செய்து உள்ளேன்.

(8) ஜெனார்த்தனன் தருமக்கர்த்தாவாக இருந்ததை நான் எந்த காலத்திலும் ஆட்சேபனை செய்யாததால் அவர் செய்த அனைத்து செயல்களையும் நான்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.10.08 16:44:23 +0530

ஏற்கொள்வதாக அர்த்தம் என்றால் சரியல்ல. ஜெனார்த்தன முதலியார் அவரது பவர் ஏஜன்ட் மூலம் அசல் வழக்கு எண் 225/2003 தாக்கல் செய்து வழக்கு சொத்துக்களை விற்க அனுமதி பெற்றார் என்றால் சரிதான். அது ஒரு தலையான தீர்ப்பு.

(9) அந்த தீர்ப்பானது கடலூர் சார்பு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு என்றால் சரிதான். அந்த தீர்ப்பின் அடிப்படையில் தான் செல்வம் என்பவர் கிரையம் வாங்கினார் என்றாலும் அவரிடம் இருந்து 16 ஆம் பிரதிவாதி கிரையம் வாங்கினார் என்றாலும் சரிதான். வழக்கு சொத்தில் 16 ஆம் பிரதிவாதி தான் பயிர் வைத்து வருகிறார் என்றால் சரியல்ல.

(10) சார்பு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை ரத்து செய்ய உரிமையியல் நிதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. ஏற்கனவே 16 ஆம் பிரதிவாதி வாங்கிய சொத்தில் சிவசங்கர முதலியார் மற்றும் ராமசந்திர முதலியார் குத்தகை தாரராக இருந்தார்கள் என்றால் சரிதான்.

(11) அவர்கள் இருவரும் அசல் வழக்கு எண் 32/2004 ல் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதில் 16 ஆம் பிரதிவாதியும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். 23.03.2017 ல் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

(12) அசல் வழக்கு எண் 225/2003 ல் கொடுக்கப்பட்ட தீர்ப்பு செல்லும் என்று அசல் வழக்கு எண் 32/2004 ல் கண்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. இவ்வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2025.10.08 16:44:27 +0530

(13) வழக்கு சொத்துக்கள் தருமச்சொத்துக்களாக இருந்து அதில் இருந்து வரும் வருமானத்தைக் கொண்டு தருமக்காரியங்கள் நடந்தது என்பதை காண்பிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்தேனா என்றால் ஆவணம் இல்லை. தருமக்காரியங்கள் எந்த காலத்திலும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

(14) 16 ஆம் பிரதிவாதி வாங்கி உள்ள சொத்து எங்கு உள்ளது என்றால் வெள்ளப்பாக்கத்தில் உள்ளது. அந்த சொத்தின் விஸ்தீரம் எவ்வளவு இருக்கும் என்றால் அது சுமார் 7 ஏக்கர் சொத்து ஆகும். எவ்வளவு விலை போகும் என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்தினை கிருஷ்ணசாமி Trust அனுபவித்து வந்ததை காண்பிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

(15) வழக்கு சொத்து உள்ள இடத்தில் 1 ஏக்கல் நிலமானது சுமார் 55 லட்சம் விலை பெறும் என்றால் எனக்கு தெரியவில்லை. எனது வழக்கிற்கு எந்த விதமான வழக்கு மூலமும் இல்லை என்றாலும் 16 ஆம் பிரதிவாதியிடம் இருந்து பணம் பெருவதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்நீதிமன்றத்திற்கு சார்பு நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்ய உரிமை இல்லை என்றாலும் இவ்வழக்கு தள்ளுபடிக்கு அறுகமானது என்றாலும் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று .

மறுவிசாரணை இல்லை.

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.10.08 16:44:31 +0530